




அரியலூர் மாவட்டக் கழகத்தின் நீண்டநாள் கனவான 'கலைஞர் அறிவாலயம்' அடிக்கல் நாட்டு விழாவில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு பங்கேற்று, புதிய கட்டடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி சிறப்பித்தார். கழகத்தின் வளர்ச்சிக்கான இந்த வரலாற்று நிகழ்வில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

### மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் – கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி இணைந்து நடத்திய

# 'தமிழ்க்கூடல்' நிகழ்வு! 'சங்க இலக்கியத்தில் சிறுதானியங்கள்' கருத்தரங்கம்!

## உலகத் தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா தலைமை!



மதுரை, டிச.8-

மதுரை உலகத் தமிழ்ச் சங்கமும் கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரியும் இணைந்து நூற்று எண்பத்து எட்டாவது 'தமிழ்க் கூடல்; நிகழ்ச்சியை 05.12.2025 அன்று முற்பகல் 10.30 மணிக்கு உலகத் தமிழ்ச் சங்கப் பெருந்திட்ட வளாகக் கூட்ட அரங்கில் நடத்தியது. இந்நிகழ்ச்சியை உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வுவளமையர் முனைவர் ஜ.ஜான்சிராணி அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் துணைத் தலைவர் ஃ இயக்குநர் முனைவர் இ.சா.பர்வீன் சுல்தானா அவர்கள்; தலைமை தாங்கினார்.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் நுண்ணுயிரியல், உணவியல் மற்றும் ஊட்டச்சத்துத் துறைகளின் தலைவரான பேராசிரியர் பெரு.வீர. கோபிமணிவண்ணன் அவர்கள் 'சங்க இலக்கியத்தில் சிறுதானியங்கள்' எனும் தலைப்பில் தமிழ்க்கூடலுரை நிகழ்த்தினார்;. அவர் தம் உரையில், ";சர்வதேச சிறுதானிய ஆண்டாக 2023ஆம் ஆண்டை ஐ.நா.சபை அறிவித்தது. சிறுதானியத்திற்கான ஒரு திட்டத்தை உருவாக்கினேன். இத்திட்டத்திற்காக 10 இலட்சத்திற்கான நிதி பெற்றேன். மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி சிறுதானியத்தில் என்னென்ன செய்யலாம் என்பதற்கான பயிற்சியை பேராசிரியர்கள், மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசின் இந்திய பால்வளக் குழுமத்தின் பிரதிநிதியாக இருக்கிறேன். அவர்கள் சார்ந்த கருத்துகளை மத்திய அரசுக்குத் தெரிவிக்கிறேன். சிறுதானியம் என்று பெயரிடப் பட்டாலும் இதுதான் நமக்கான உணவாக இருக்கிறது. நமது பாரம்பரிய உணவிலிருந்து நீங்கிக் கொண்டு வருகிறோம். கம்பு, கேப்பை, வரகு, தினை, சாமை இவற்றை நவதானியங்கள் என்று கூறுவர். உணவே ஒழுக்கம் சார்ந்த கல்வியை உருவாக்கும். நாம் சாப்பிடும் உணவு சரியானதாக இருக்கவேண்டும். மன்னர் கல்லூரியில் மாணவர்கள் தயாரிக்கின்ற சிறுதானிய உணவு நாள்தோறும் விற்கப்படுகின்றது. அவர்களுக்கு ஊதியமும் கொடுத்துவருகிறோம். இதன் மூலம் தொழிலை மாணவர்கள் கற்கவும் பயனடையவும் வழிவகை செய்கிறோம். இம்முயற்சியை ஐம்பதாயிரம் செலவில் மாணவர்களை இயக்குநராக வைத்து நடத்துகிறோம்" என்று குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சிக்கு உலகத் தமிழ்ச் சங்கத்தின் ஆய்வறிஞர் முனைவர் சு.சோமசுந்தரி அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்நிகழ்ச்சிக்குத் தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரி மாணவர்கள், திருமங்கலம் அன்னை பாத்திமா கல்லூரி மாணவர்கள், உலகத் தமிழ்ச் சங்க உறுப்பினர்கள், தமிழ் ஆர்வலர்கள், கவிஞர்கள் என அறுபதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

